**செப்டம்பர் - 04**

# TNPSC துளிகள்

- ❖ சமுதாயத்தில் அடித்தட்டு மக்களின் நலனுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்த லக்ஷ்மண ஐயரின் உருவச்சிலையை தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வரிலால் புரோகித் திறந்து வைத்தார்.
- ❖ பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் உயர்நீதிமன்றத்தின் முதல் தலைமை பெண் நீதிபதியாக நீதிபதி தஹிரா சஃப்தார் பதவியேற்றார்.
    - ○ முன்னதாக, 1982-ல் அவர் பலூச்சிஸ்தான் நீதிமன்றத்தின் முதல் பெண் குடிமையியல் நீதிபதியாக ஆனார்.
- ❖ இராஜஸ்தான் அரசானது, 1947க்கு பிறகு வீரமரணம் அடைந்து, அவருடைய நெருங்கிய உறவினர்கள் யாருக்கும் வேலை வழங்காமல் இருக்கும் பட்சத்தில் வீரமரணம் அடைந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த குறைந்தபட்சம் ஒருவருக்காவது வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக அனைத்து மாவட்ட தலைமையகங்களிலும் சிறப்பு வேலை வாய்ப்பு முகாம்களை ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளது.
- ❖ இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடுவால் எழுதப்பட்ட “மூவிங் ஆன்…. மூவிங் ஃபார்வார்டு : ஏ இயர் இன் ஆஃபிஸ்” (முன்னேற்றத்தை நோக்கி… மேலும் முன்னேற்றம் - பணியில் ஒரு ஆண்டு) என்ற புத்தகத்தை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.
- ❖ துறைமுகப் பகுதியின் உள்ளே மிகப்பெரிய கச்சா எண்ணெய் தாங்கியை (VLCC) கையாளக்கூடிய முதல் பெரிய துறைமுகமாக சென்னை துறைமுகம் (ChPT – Chennai Port Trust) ஆனது. இன்றளவு வரை துறைமுகத்தால் கையாளப்படும் பெரிய கப்பலாக VLCC நியூ டைமண்டு என்ற கப்பல் உள்ளது.
- ❖ பொதுமக்களுக்கான போக்குவரத்திற்காக ஒரு நாடு ஒரு அட்டை (One nation One card) என்கிற திட்டத்தை இந்தியா விரைவில் வெளியிடும் என்று நிதி ஆயோக்கின் தலைமை செயல் அதிகாரி அறிவித்தார். இந்தத் திட்டமானது பல்வேறு வகையான போக்குவரத்து முறைகளுக்கிடையே தடையற்ற இணைப்பைக் கொண்டுவரும்.

# தமிழ்நாடு செய்திகள்

## கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (Coastal Regulation Zonal Management)

- ❖ தமிழ்நாடு அரசு, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் இறுதி வரைவை மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது.
- ❖ இந்தத் திட்டமானது, தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களையும் 28 தீவுகளையும் உள்ளடக்கிய கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்காக 1076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையை 6 பிரிவுகளாக பிரிக்கின்றது. (6 Coastal Regulation Zones - கடலோர ஒழுங்குமுறை மண்டலம்)
- ❖ அவை CRZ IA, CRZ IB, CRZ II, CRZ III, CRZ IVA மற்றும் CRZ IVB எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ மன்னார் வளைகுடா கடல்சார் தேசியப் பூங்கா ஒன்று இம்மாநிலத்தில் உள்ளது.

# தேசியச் செய்திகள்

## மின்னணு மருந்தகத்தால் விற்கப்படும் மருந்துகள் மீதான வரைவு விதிகள்

- இந்தியா முழுவதும் ஆன்லைன் மூலமான மருந்து விற்பனையை முறைப்படுத்துவதற்காக மின்னணு மருந்தகத்தால் விற்கப்படும் மருந்துகள் மீதான வரைவு விதிகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இது, நம்பகத்தன்மை கொண்ட ஆன்லைன் தளங்களிலிருந்து கிடைக்கப்பெறும் உண்மையான மருந்துகள் நோயாளிகளுக்குச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வரைவு விதிகளின்படி, பதிவு செய்யாமல் எந்தவொரு நபராலும் மின்னணு மருந்தகத்தின் மூலமாக மருந்துகளை விற்பனை செய்யவோ அல்லது விநியோகிக்கவோ, கையிருப்புக் கொள்ளவோ (வைத்திருக்கவோ), காட்சிப்படுத்தவோ கூடாது.
- இந்தப் புதிய வரைவு விதிகளானது, மின்னணு மருந்தகங்களை மத்திய மருந்துகள் தரநிலைக் கட்டுப்பாட்டு அமைப்புடன் பதிவு செய்யவும் ஆன்லைன் தளத்தின் மூலமாக வர்த்தக உரிமம் பெறவும் வலியுறுத்துகிறது.

## அலுவல் மொழித்துறையின் முதல் சீராய்வுக் கூட்டம்

- அலுவல் மொழித்துறையின் முதல் சீராய்வுக் கூட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமை தாங்கினார்.
- இந்தக் கூட்டமானது, அலுவல் பணியில் ஹிந்தி மொழியை செயல்படுத்துவது தொடர்பான செயல்பாட்டையும் சிக்கல்களையும் பற்றி விவாதிக்கும் நோக்கம் கொண்டதாகும்.
- மேலும், இந்தத் துறையானது, மொழிபெயர்ப்பு வேலையை எளிதாக்கவும் விரைவாக்கவும், அனைத்து வகையான அலுவல் கோப்புகளை ஆங்கிலத்தில் இருந்து ஹிந்திக்கும் ஹிந்தியிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்ப்பதற்காக "கந்தஸ்த்" என்றழைக்கப்படும் கணிணி மென்பொருளை உருவாக்கியுள்ளது.
- மேலும், ஆங்கிலம் உட்பட 16 மொழிகளில் பயன்படுத்தும் வகையில் "பிரவாஹ்" என்ற மின்னணு கற்றல் தளத்தை இத்துறையானது உருவாக்கியுள்ளது.
- இத்தளமானது 2018 செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி ஹிந்தி திவாஸ் அன்று தொடங்கப்பட உள்ளது.
- இந்த மின்னணு கற்றல் தளத்தின் உதவியுடன் யார் வேண்டுமானாலும் அவரவர் தாய்மொழியின் வாயிலாக ஹிந்தியை கற்றுக்கொள்ள முடியும்.
- முன்னதாக, 2017 ஹிந்தி திவாஸ் அன்று, எளிதில் ஹிந்தியை கற்றுக்கொள்ளுவதற்காக 'லீலா' என்ற கைப்பேசி செயலி ஒன்று தொடங்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐ.நா. உலகச் சுற்றுலா அமைப்பின் 2017 அறிக்கை

- அறிக்கையின்படி, கடந்த வருடத்தில் சர்வதேச வருகை 1.323 மில்லியனை எட்டியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில், மொத்தமாக 15.54 மில்லியன் வருகையைக் கொண்டு தெற்காசியப் பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான அட்டவணையில் இந்தியா முன்னே உள்ளது.
- ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா ஆகியவை முறையே 8% மற்றும் 9% வருகையுடன் பிராந்தியங்களின் தரவரிசையில் முன்னே உள்ளது.
- சீனா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா முறையே முதல் 7 சுற்றுலாத் தளங்களாகும்.

## சுனாமி ஒத்திகைப் பயிற்சி 'IOWave18'

- 2018 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பெருங்கடல் சீற்றப்பயிற்சி (IOWave18) செப்டம்பர் மாதம் 4 ஆம் தேதி இந்தியப் பெருங்கடலில் தொடங்கியது. இந்தியாவானது மற்ற 23 நாடுகளுடன் இணைந்து இந்த மாபெரும் பெருங்கடல் முழுவதும் நடைபெறும் சுனாமி ஒத்திகைப் பயிற்சியில் பங்கேற்கிறது.
- இந்த முன்னெச்சரிக்கைப் பயிற்சியானது யுனெஸ்கோவின் நாடுகளுக்கிடையேயான பெருங்கடல் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- இப்பயிற்சியானது, 9 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள கடலோர சமூகங்களைச் சேர்ந்த 1,25,000க்கும் அதிகமான மக்களை வெளியேற்றும் ஒத்திகையைக் கொண்டதாகும்.
- இந்தியாவில், IOWave18 ஆனது மத்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையத்தால் (INCOIS - Indian National Centre for Ocean Information Services) தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA - National Disaster Management Authority) மத்திய உள்துறை அமைச்சகம் (MHA - Ministry of Home Affairs), தேசியப் பேரிடர் மீட்புப் படை மற்றும் கடலோர மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் போன்றவற்றின் உதவியுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது.

# மாநிலச் செய்திகள்

## துடிப்பான குஜராத் மாநாடு

- குஜராத் அரசாங்கமானது, 2019 ஆம் ஆண்டிற்கான துடிப்பான குஜராத் உச்சி மாநாட்டிற்காக இந்தியாவை மையமாகக் கொண்ட ஒரு தலைசிறந்த அமெரிக்க ஆலோசனைக் குழுவுடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான துடிப்பான குஜராத் உச்சி மாநாடானது "புதிய இந்தியாவுக்கான எண்ணங்கள்" என்கிற கருவை நோக்கி நடைபெற உள்ளது.
- இந்த மாநாட்டிற்கான உயர்மட்ட தலைமை செயல் அதிகாரிகள் குழுவிற்கு அமெரிக்க இந்திய மூலோபாய மற்றும் கூட்டிணைவு மன்றத்தின் (USISPF)

தலைவரான ஜான் சாம்பார்ஸ் தலைமை தாங்குவார்.

# விளையாட்டுச் செய்திகள்

## 18வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நிறைவு

- ஆசிய விளையாட்டின் 18வது பதிப்பானது 2018 செப்டம்பர் மாதம் 02-ம் தேதி அன்று நிறைவு பெற்றது.
- பதக்கப் பட்டியலில் 289 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பிடித்தது. அதனைத் தொடர்ந்து ஜப்பான் இரண்டாவது இடத்தையும் (205) கொரியா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.
- இந்தியா, 15 தங்கம், 24 வெள்ளி மற்றும் 30 வெண்கலம் என்ற அளவில் பதக்கங்களை வென்று 69 பதக்கங்களுடன் இதற்கு முந்தைய சாதனையை சமன் செய்தது.

## சர்வதேச துப்பாக்கி சுடுதல் கூட்டமைப்பின் (ISSF) உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

- 52வது ISSF (International Shooting Sport Federation) உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியானது தென்கொரியாவின் சங்வன் என்னும் இடத்தில் 2018 செப்டம்பர் 02-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை நடைபெற்றது.
- இந்தச் சாம்பின்ஷிப் போட்டியில்,
    - அர்ஜூன் சிங் சீமா அவர்கள் தனிநபர் ஜீனியர் 50மீ பிஸ்டல் பிரிவில் தங்கம் வென்றார்.
    - ஜீனியர் அணிப் பரிவில், அர்ஜீன் சிங் சீமா, கௌரவ் ராணா, அன்மோல் ஜெயின் தங்கம் வென்றனர்.
    - மகளிருக்கான ஜீனியர் ட்ராப் போட்டியில் மனீஷா கீர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- - - - - - - - - - - - -